0 9 DEC 2010
செயலகம், சென்னை

<u>சுருக்கம்</u>

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் - உள்ளாட்சி அமைப்புகள் தவிர பிற அமைப்புகளுக்கு குடிநீர் விநியோகத் திட்டத்தினை வைப்புத்திட்டம் மூலம் செயல்படுத்துதல் – நிலத்தடி நீரை பயன்படுத்துவதற்காக 1 கிலோ லிட்டருக்கு ரூ.5/- கூடுதல் கட்டணம் வசூலிக்க அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ4) துறை

**அரசாணை (நிலை) எண்.301** **நாள்:07.12.2010**

**கார்த்திகை 21, திருவள்ளுவர் ஆண்டு 2041**
**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண். 136, நநிமகுவ (குவ4) துறை, நாள் 03.10.2002

படிக்க:

2. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் கடித எண்.2112 / கூடுதல் தண்ணீர் கட்டணம் / எஸ்டிஓ / இ(ம)ப/2010 நாள் 2.10.2010

*****

<u>ஆணை</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் 20.12.2006 நாளிட்ட வாரிய செயல்முறை ஆணை எண். 115 – ல், குடிநீருக்கான கட்டணம் நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்காக, திட்டங்கள் வகுக்கும் பொழுது தொழில் நிறுவனங்கள், வணிக வளாகங்கள், தனியார் மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு வழங்க வேண்டிய நீரின் அளவிற்கு தனித்தனியே குடிநீர் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், அதன்படி, குடிநீர் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படும் பொழுது, மொத்த மதிப்பீட்டில் பங்குத்தொகை செலுத்தும் வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு ஒரு கிலோ லிட்டருக்கான குடிநீர் கட்டணமாக ரூ.15/-ம், மொத்த மதிப்பீட்டில் பங்குத் தொகை செலுத்தாத தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு ஒரு கிலோ லிட்டருக்கான குடிநீர் கட்டணமாக ரூ.60/-ம், தனியார் மருத்துவமனைகளுக்கு ஒரு கிலோ லிட்டர் குடிநீருக்கு ரூ.50/-ம், மற்றும் தனியார் பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு ஒரு கிலோ லிட்டர் குடிநீருக்கு ரூ.30/-ம் வசூலிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், உள்ளாட்சி அமைப்புகள் தவிர பிற அமைப்புகளுக்கு குடிநீர் விநியோகத் திட்டத்தினை வைப்புத் திட்டமாக (Deposit Scheme) செயல்படுத்தும் பொழுது நிலத்தடி நீரை பயன்படுத்துவதற்காக கூடுதல் தண்ணீர் கட்டணமாக ஒரு கிலோ லிட்டருக்கு ரூ.5/- வீதம் வசூலிக்கவும், அவற்றின் மூலம் பெறப்படும் தொகையினை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்படும் உட்கட்டமைப்புகளின் மேம்பாட்டிற்காக (Infrastructure Development) அல்லது நீர்

ITS



சேகரிக்கும் அமைப்புகளை (Water harvesting structure) ஏற்படுத்தவோ அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்குமாறு அரசைக் கோரியுள்ளார். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் செயற்குறிப்பினை வாரியக் குழுமமும் தனது 8.9.2010ஆம் நாளிட்ட தீர்மான எண்.2.6 – ல் அரசுக்கு பரிந்துரை செய்து தீர்மானம் இயற்றியுள்ளது.

3. மேற்கண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் செயற்குறிப்பினை கவனமுடன் பரிசீலித்து, உள்ளாட்சி அமைப்புகள் தவிர பிற அமைப்புகளுக்கு குடிநீர் விநியோகத் திட்டத்தினை வைப்புத் திட்டமாக (Deposit Scheme) செயல்படுத்தும் பொழுது நிலத்தடி நீரை பயன்படுத்துவதற்காக, வாரியம் கூடுதல் தண்ணீர் கட்டணமாக ஒரு கிலோ லிட்டருக்கு ரூ.5/- வீதம் வசூலிக்கவும், அவற்றின் மூலம் பெறப்படும் தொகையினை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்படும் உட்கட்டமைப்புகளின் மேம்பாட்டிற்கு (Infrastructure Development) பயன்படுத்தவும், இக்கூடுதல் தொகையினை ஒவ்வொரு காலாண்டின் முதல்வாரத்தில் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் கூடுதல் கட்டணம் வசூலிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் 09.11.2010 நாளிட்ட அ.சா. எண். 257/ இ.செ.(கே.கே.) / 2010 – இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அசோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை.5

நகல்:
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை.9
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை.9
முதன்மைச் செயலரின், தனிச்செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை.9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2, குவ1, குவ2, குவ3 (ம) வரவு செலவு) துறை, சென்னை.9
நிதி (நநிமகுவ / வசெபொ ) துறை சென்னை.9
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 5.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை – 108.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 12/12